# யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

## தவத்திரு யோகர் சுவாமிகள்
## ஞாபகார்த்த
## பரிசளிப்பு விழா
## 2018



29.05.2018

# J/Columbuthurai Hindu Maha Vidyalayam

## PRIZE DAY - 2018

**29th May 2018, Tuesday**
**at 9.30 p.m**
**in the Yogar Swami Hall**

## President

**Mr.K.K.Thavakeeswaran (Principal)**

## Chief Guest

**Hon.T.Chitharthan**
**(Member of Parliament)**

## Special Guest

**Mrs.T.Mohanaraj**
**(Deputy Director of Education - Management**
**Zonal Education office - Jaffna)**

## மகுடவாசகம்

"மெய்ப் பொருள் காண்பதறிவு"

## நோக்கக்கூற்று (Vision)

மாறிவரும் உலகிற்கேற்ப ஒவ்வொரு பிள்ளையினதும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து பூரண ஆளுமை கொண்ட சுயாதீன சிந்தனைப் போக்குடையவராக வாழ வழிகாட்டல்

## பணிச்செயலொழுங்கு (Mission)

- வாழ்க்கையின் சவால்களை எதிர் கொள்ளப் பழகுதல்
- தமது இயலுமைகளை உணரச் செய்தல்
- சுற்றாடல் வளங்களை இனங்காணல்
- கிடைக்கும் வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெறல்
- பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்



2018 வித்தியாலய ஆசிரியர் குழாம்.

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புப் பாடல்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- பேச்சு
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- குழு நடனம் (கோலாட்டம்)
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

# அதிபர் அறிக்கை

அருள் நிறைந்த யாழ் கொழும்புத்துறை வதிரிபீட விநாயகரை வணங்கி, யோகசுவாமிகளின் அருளாசிகளை வேண்டி 2017ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யோகசுவாமிகள் ஜனன தினத்தில் பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற எமது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களே, அவர் தம் பாரியார் திருமதி மீனா சித்தார்த்தன் அவர்களே,

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது யாழ் வலயத்தின் பிரதிக் கல்விப்பணிபர்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி தர்மிகா மோகனராஜ் அம்மணி அவர்களே,

அயல் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, அன்பான பெற்றோர்களே,

பிரதி அதிபர், உப அதிபர், பகுதித்தலைவர்களே, பாடசாலையின் ஆசிரியர்களே, கல்வி சாரா ஊழியர்களே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்து கொள்வதுடன் இவ் இனிய வேளையில் உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்றுக்கொள்கின்றேன்.

எமது மதிப்பிற்கரிய பிரதம விருந்தினர் அவர்களே, சைவமும் தமிழும் ஒருங்கே இணைந்து வளம் பெற்றுள்ள கொழும்புத்துறைக் கிராமம், ஆசான் யோகர் சுவாமிகளின் திருவடி பதிந்த இடமாகும். தவத்திரு யோகசுவாமிகள், சுவாமி விப்புலானந்தர், ஆறுமுகநாவலர் போன்ற ஆர்வலர்களின் ஆத்மார்த்த சிந்தனையின் வடிகாலாக அமைந்த எமது வித்தியாலயம் நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

தமிழ் தேசத்தின் பற்றாளராயும், சமூக ஆர்வலராகவும், தமிழ் உணர்வாளருமாகிய தாங்கள் எமது வித்தியாலத்தின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருப்பது மிக மிகப் பொருத்தமானது என எண்ணிப் பெருமையடைகின்றேன்.

பாராளுமன்ற உறுப்பினராகிய தாங்கள் எமது மக்களுக்கு ஆற்றுகின்ற அளப்பெரும் சேவைகள் நாம் அனைவரும் அறிந்ததே. தாங்கள் தங்களின் ஆரம்பக் கல்வியை யா/ இராமநாதன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யா/ ஸ்கந்தவரோயக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்து, லண்டன் School of Accountancy இல் கணக்காளராக தேர்வடைந்து, லண்டன் மாநகரில் சர்வதேச தனியார் நிறுவனமொன்றின் உதவிக்கணக்காளராக பணியாற்றி உள்ளீர்கள்.

1983 கறுப்பு யூலையினால் தங்களின் கவனம் தமிழ் மக்கள் மீது முழுமையாகத் திரும்பியது. தமிழ் இனத்தின் மீது தாங்கள் கொண்டிருந்த பற்றுக்குக் காரணமாக தாங்கள் லண்டனில் வகித்த பதவியை ராஜினாமா செய்து அரசியலில் பிரவேசித்தீர்கள். எமது இனத்தின் கல்வி வளர்ச்சிக்காக தாங்கள் புரிந்த அறக்கொடை எமது கல்விச் சமூகத்தினால் என்றும் மறக்க முடியாதது. தாங்கள் அன்பளிப்புச் செய்த 230 பரப்புக்குள் இன்று அழகாக காட்சி அளிக்கின்றது. யாழ். கல்வியற் கல்லூரி தங்களின் பேரனார் கந்தையா உபாத்தியர் தனது சொந்தக் காணியை ஸ்கந்தவரோயாக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தமையையும் இவ்வேளையில் நாம் நினைவு கூர்ந்து தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம். தங்கள் கரங்களால் எமது மாணவர்கள் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெறுவது பெரும் பாக்கியம் எனக் கருதுகின்றோம். தமிழ் மக்களுக்கு தங்கள் சேவை தொடர வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றோம்.

திருமதி மீனா சித்தார்த்தன் அவர்களே,

தாங்கள் தம் கணவரின் சமூகப்பணிகளிலும், அரசியல் பணிகளிலும் உறுதுணையாக இருந்து வருகின்றீர்கள். சமூகத்தில் உங்கள் கணவரின் வெற்றி உங்கள் வெற்றியாகவே கணிக்கப்படும். அந்த வகையில் உங்களையும் இந்த வேளையில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ் வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.தர்மிகா மோகன்ராஜ் அம்மணி அவர்களே, தங்கள் வருகை எம் பாடசாலை சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்துகின்றது. துடிப்புமிக்க இளம் நிர்வாக அதிகாரியாக யாழ். கல்வி வலயத்திற்கு வருகை தந்தவேளையில் உங்களை எமது சிறப்பு விருந்தினராக நாம் அழைத்துள்ளோம். யாழ் வலயம்

உங்கள் சேவையால் உயரவேண்டும் என இவ்வேளையில் வாழ்த்தி நிற்கின்றேன்.

யாழ் மாவட்டத்தில் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் தங்களின் ஆரம்பக் கல்வியை யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் யா/ திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் கற்றீர்கள். இடைநிலைக் கல்வியையும் உயர்கல்வியையும் யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கற்றுத் தேர்ந்தீர்கள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கைத்தொழில் புள்ளி விபரவியலும் கணிதவியல் நிதியியலிலும் பட்டம் பெற்றுள்ளீர்கள்.

2014ல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் தங்களின் திறமையை வெளிப்படுத்தி கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவானீர்கள். தங்களின் முதல் சேவை துணுக்காய் கல்வி வலயத்திற்கு கிடைத்தது. ஆங்கே முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட தாங்கள் இன்று கல்வி நிர்வாக சேவை தரம் 3ல் யாழ் வலயத்தில் கடமை புரிகின்றீர்கள். எதிர்காலத்தில் தாங்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று எமது கல்விச் சமூகத்திற்கு தொடர்ந்து சேவை புரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 – 5 | 86 | 56 | 142 |
| 6 – 9 | 79 | 54 | 133 |
| 10 – 11 | 30 | 33 | 63 |
| 12 – 13 | 14 | 26 | 40 |
| மொத்தம் | | | |

## புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்

1. திரு.இ.ராஜ்கரன் (பிரதிஅதிபர்)
2. திரு.ந. லிங்கேஸ்வரன்
3. திருமதி.சு இரட்ணேஸ்வரன்

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1. திரு. ந. கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர்)

# வாண்மை விருத்திச் செயற்பாடுகள்

2017இல் Bed பட்டத்தினைப் பின்வரும் ஆசிரியர்கள் பெற்றுள்ளனர்.

திரு. ந. குமாரதாசன் (கணிதம்)

திருமதி.சா.நாகேஸ்வரன் (ஆரம்பக் கல்வி)

செல்வி த.மதனகாந்தி (ஆரம்பக்கல்வி)

2017 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள்

செல்வன் செ. டியூட்டன்ராஜ்

செல்வி இ.சிந்துஜா

2017 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் திறமையான பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றுக்கொண்ட மாணவி

செல்வி ம.தர்சிகா

2017 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

செல்வி இ.சுமித்திரா

செல்வி ந.ரக்ஷனா

2017 ஆம் ஆண்டு கல்விப் பொதுச்சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்று இப்பாடசாலையில் தொடர்ச்சியாகக் கல்விகற்கும் மாணவர்கள்

செல்வி க. கஜேந்தினி

செல்வி பா. கௌசிகா

செல்வி அ. மேரியூலியட்

2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தொடர்ந்து இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள்

1. செல்வன் : ஜெ. வருணன்
2. செல்வன் : இ.சாம்சன்
3. செல்வன் : மோ அலன்ஸ்ரீபன்ராஜ்
4. செல்வன் : பி.நிரோஜன்
5. செல்வன் : ப.டயாளன்

## பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர் விபரம்

தலைவர் : திரு.K.K. தவகீஸ்வரன் (அதிபர்)

உபதலைவர் : திரு.இ.ராஜ்கரன் (பிரதி அதிபர்)

செயலாளர் : திருமதி. பா.ராஜினி (பெற்றோர்)

பொருளாளர் : திருமதி ச.சத்தியகுமார் ஆசிரியர்

**உறுப்பினர்கள்**

திருமதி சா.நாகேஸ்வரன் (ஆசிரியர்)
திருமதி வி.சிவலோகநாதன் (ஆசிரியர்)
திருமதி ந.ரவீந்திரன் (ஆசிரியர்)
திரு பே. அருட்செல்வன் (ஆசிரியர்)
திருமதி S. சுகந்தினி (பெற்றோர்)
திருமதி இ.பவானி (பெற்றோர்)
திரு G.A. மகேசன் (பெற்றோர்)
செல்வன் ந. லக்ஷன் (பழைய மாணவர்)
திருமதி இ.தயாநிதி (பழைய மாணவர்)

## பழைய மாணவர் சங்கம்

தலைவர் : திரு.K.K. தவகீஸ்வரன் (அதிபர்)

செயலாளர் : திரு.கோ.கஜேந்திரன்

உபசெயலாளர் : திரு.S.சத்தியநிர்மலன்

பொருளாளர் : திரு.செ.செல்வசுரேஸ்

நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு.S, சர்வானந்தன்

திரு.B லக்ஷன்

திரு.S செந்தூரன்

திரு.S.லுயின்ரன்ராஜ்

செல்வி R.குணநிதி

செல்வி எ.மேரிஎமில்டா

செல்வி உ.அஜித்தா

## ஆரம்பப் பிரிவு மன்றம்

ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் இம்மன்றம் செயற்பட்டு வருகின்றது. மாதத்தில் ஒரு தடவை கூடும் இம்மன்றத்தின் செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளை மேம்படுத்த முடிகின்றது.

பொறுப்பாசிரியர் திருமதி சா.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இம் மன்றத்தின் தலைவராக சு.சிலம்பரசனும் செயலாளராக நா.பபிசாளினியும் செயற்படுகின்றனர்.

ஆத்துடன் ஆரம்பப் பிரிவிற்கான செயற்பாடுகளாக செயற்பட்டு மகிழ்வோம், சித்திரம், விரைவு கணிதம் என்பவற்றில் சித்திரத்தில் தரம் 1 மாணவி த.அர்சிகா 3ம் இடத்தையும் தரம் 5 மாணவன் சு.சிலம்பரசன் விரைவு கணிதத்தில் 2ம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் பெற்று வலயமட்டப் போட்டியில் பங்குபற்றியதுடன் தரம் 4 மாணவன் கா.துஷ்யந்தன் விரைவு கணிதத்தில் 5ம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மன்றம்

எமது பாடசாலையின் தமிழ் மன்றம் மாதந்தோறும் தனது செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. மாணவர்களின் தனிப்பட்ட ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு சிறந்த களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமிழ்த்தினப் போட்டிகளுக்கான, தயார்படுத்தல்களையும் தமிழ் மன்றம் வழங்கி வருகின்றது. 2018 யாழ் கோட்ட மட்ட தமிழ்தினப் போட்டியில் எமது மாணவர்களின் மேடை நாடகம் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வருடந்தோறும் பிரதேச மட்டங்களில் நடைபெறும் முதியோர் தினம், சிறுவர் தினம் தொடர்பான கட்டுரை, கவிதை, பட்டிமன்றப் போட்டிகளில் மாணவர்களுக்கான வழிகாட்டல்களையும் மன்றம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்றப் பொறுப்பாசிரியர்கள்

திருமதி.சி.யஸ்ரஸ்
திருமதி மீரா மகேந்திரன்
திருமதி ச.மோகனச்செல்வன்

தலைவர் செல்வி செ. தனுசியா
செயலாளர் செல்வி ஜீ தஜேந்தினி
பொருளாளர் செல்வன் சே.கோகுலன்

## கணித விஞ்ஞான மன்றம்

எமது பாடசாலையில் கணித விஞ்ஞான மன்றம் கடந்த வருடங்களைப் போலவே சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றது. மாதந்தோறும் நடைபெறும் கணித விஞ்ஞான மன்றத்தில் மாணவர்களை பங்குபற்றச் செய்து அவர்களது கணித, விஞ்ஞான அறிவுத்தேடல்கள் விருத்தி செய்யப்படுவதுடன் பல்வேறுபட்ட ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்கும் களம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

கணித விஞ்ஞான மன்றத்தினால் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட கணித விஞ்ஞான தொழில்நுட்ப கண்காட்சியில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி அவர்களது கணித, விஞ்ஞான அறிவையும் திறமைகளையும் பல்வேறு ஆக்கங்கள், கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கங்கள் என்பவற்றினுடாக வெளிக்கொணர்ந்து அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய பேச்சு, வினா விடைப் போட்டி, புத்தாக்கம் சார் கண்காட்சி, சுவரொட்டி, போன்ற நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வருடத்திலிருந்து கணித – விஞ்ஞான மன்றமானது தொழிநுட்ப அலகினையும் இணைத்து, கணித விஞ்ஞான தொழிநுட்ப மன்றமாக செயற்பட்டு வருகின்றது.

எதிர்வரும் காலங்களில் மாணவர்களிடத்தில் புத்தாக்க சிந்தனைகள் மேலும் விருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பது கணித விஞ்ஞான மன்றத்தின் இலக்காகும்.

**மன்றப் பொறுப்பாசிரியர்கள்**

1. திரு.த.குமாரதாசன்
2. திரு.பே.அருட்செல்வன்
3. திரு.N. லிங்கேஸ்வரன்
4. திருமதி.சு. செந்தூரன்
5. திருமதி.வ.கஜந்தன்
6. திரு.க.ஜெயராஜ்

தலைவர் : செ.சஜஸ்ரக்சேய்

செயலாளர் : ஜெ.தனுஷியா

பொருளாளர் : எ.வாதுஷன்

## சமூக விஞ்ஞான மன்றம்

எமது பாடசாலையில் சமூக விஞ்ஞான மன்றச் செயற்பாடுகள் மாதம் இரு தடவை நடைபெற்று வருகின்றன. மாணவர்களின் தனிப்பட்ட ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. வருடந்தோறும் சமூக விஞ்ஞான போட்டிக்கான தயார்படுத்தல்களும் வழங்கப்படுகின்றன. மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு இம்மன்றமானது உதவி செய்கின்றது.

**மன்றப் பொறுப்பாசிரியர்கள்**

திரு.சு.சுதாகர்

திரு.யோ.முகுந்தன்

திரு.வ.சுந்ததராஜன்

திருமதி.N.N.S. ஜெயக்குமார்

திருமதி சு.யமுனாதரன்

திருமதி.இ.ரஞ்சன்

**மாணவர்கள்**

தலைவர் ந.சாலினி

செயலாளர் மி.காயத்திரி

## English Union Report – 2017

Our English Union programme is going on once a month on Wednesdays in our school main hall around 1.00 p.m.

Competition is a key element of our union activities and the students have participated in each and every events enthusiastically.

It enables students to work together with others from different backgrounds and providing the prestige to arouse interest in speaking English

In future we decided to conduct our morning assembly in English once a week. We will try our best to include many creative events as to arouse interest in learning English.

Teacher in charge : Mrs. S. Selvaratnam

President : Miss.J.Thajenthini

Treasurer : Mas. J.Danojan

## இந்து மாமன்ற அறிக்கை

எமது பாடசாலை இந்துமாமன்றம் மிகச்சிறப்பான முறையில் செயற்பட்டு வருவது குறிப்படத்தக்கதாகும். எமது மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகளாக சமய விழாக்கள், சமய குரவர் குருபூசை தினங்கள், தவத்திரு யோகர்சுவாமி அவர்களது குருபூசை, நவராத்திரி விழா, பொங்கல் விழா என்பன சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும் எமது பாடசாலையின் இந்து மாமன்றத்தினால் பாடசாலைக்கருகில் உள்ள வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் மகோற்சவ காலத்தின் தேர்த்திருவிழா நிகழ்வின்போது மண்டகப்படிச் செயற்பாடுகள் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் நவராத்திரி காலத்தில் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் சந்திர கும்பப் பூசைச் செயற்பாடுகளும் எமது பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நவராத்திரி காலத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. மற்றும் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பஜனை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கோட்ட, வலய, மாகாண மட்ட சைவ சமய அறிவுப் போட்டிகளுக்கு மாணவர்கள் தயார்ப்படுத்தப்பட்டு பங்கு கொள்ளச் செய்யப்பட்டமையும் சான்றிதழ்களும் பதக்கங்களும் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. விபரம் வருமாறு

| மாணவர் பெயர் | பிரிவு | நிகழ்வு | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| செல்வன் சி.சிறிஸ்காந் | I | தோரணம் பின்னுதல் | 1 | 1 | |
| செல்வன் சி.திலக்ஷன் | III | தோரணம் பின்னுதல் | 3 | | |
| செல்வி ஜெ.டட்சாயினி | IV | தோரணம் பின்னுதல் | 2 | | |
| செல்வி சு.சாரு | II | கோலம் | 3 | | |
| செல்வி பிரியதர்சினி | IV | பேச்சு | 2 | | |
| செல்வி. ஜெ.தனுசியா | III | கதாப்பிரசங்கம் | 1 | 1 | 3 |

**2017ம் ஆண்டு இந்துமாமன்ற நிர்வாகக் குழுவினர் விபரம்**

| | |
|---|---|
| தலைவர் | திரு.V.சுந்தரராஜன் |
| உபதலைவர் | திரு.P.சர்வானந்தன் |
| செயலாளர் | திருமதிS.ஜமுனாதரன் |
| உபசெயலாளர் | திருமதி S. செல்வரத்தினம் |
| பொருளாளர் | திருமதி T. எழில்வேந்தன் |
| உபபொருளாளர் | திருமதி S. நாகேஸ்வரன் |

**உறுப்பினர்கள்**

திருமதி.S.மோகனச்செல்வன்

செல்வி T. மதனகாந்தி

திருமதி.T. கணேஸ்வரன்

திரு.Y.முகுந்தன்

**இந்துமாமன்ற மாணவர் நிர்வாகக்குழு 2017**

தலைவர் : செல்வி செ.யுவனிதா

செயலாளர் : செல்வி ஜெ. டட்சாயினி

பொருளாளர் : செல்வி செ.தனுசியா

## கிறிஸ்தவ மன்றம் - 2017

மன்றப் பொறுப்பாசிரியர் :- திரு.அ. பீற்றர்சந்தியா

தலைவர் :- செல்வி இ. இந்துஜா

உப தலைவர் :- செல்வி பி. தினுஜா

செயலாளர் :- செல்வன் ஆ. அஜந்தன்

பொருளாளர் :- செல்வி ர. சாளினி

எமது கிறஸ்தவ மன்றமானது மாணவர்களுக்கிடையே கிறிஸ்தவ சமய விழுமியங்கள், பண்பாடுகள், என்பனவற்றைப் பேணிக் காக்கும் நோக்குடன் எமது பாடசாலையில் பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வாரத்திலும் வெள்ளிக் கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனைகளும், சமய சொற்பொழிவுகளும் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. மேலும் கிறிஸ்தவ மன்றத்தின் பிரதான பணிகளில் ஒளிவிழா வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் தவக் காலத்தில் இடம்பெறும் தவக்கால தியானமும் வருடந்தோறும் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே 06.12.2017 அன்று எமது பாடசாலை ஒளிவிழா நடைபெற்றது.

இவ்விழாவினை முன்னிட்டு பல்வேறு போட்டிகளும் மாணவர்கள் மத்தியில் நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் தரம் 01 தொடக்கம் தரம் 13 வரையான அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை புலம்பெயர் உறவான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு.எஸ் சோமநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக செபமாலை தாசர் சபையின் இயக்குநர் அருட்தந்தை அ.ஜெயமீலன் அடிகள் வருகை தந்து சிறப்பித்தார்.

கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய கருத்துக்களை எடுத்தியம்பி கிறிஸ்தவ விழுமியங்கள் எவ்வாறு பாடசாலையில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென கருத்துரை வழங்கினார். விழாவின்போது கலைநிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

எமது கிறிஸ்தவ மன்றம் திறம்படச் செயற்பட பல உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி எமக்கு வழிகாட்டுகின்ற அதிபர், பிரதி அதிபர்கள், மன்றப்பொறுப்பாசிரியர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் இறையருளால் கிறிஸ்தவ மன்றத்தின் பணிகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## விளையாட்டுத்துறை

எமது பாடசாலையில் கடந்த ஆண்டு விளையாட்டுச் செயற்பாடுகளில் கணிசமான வெற்றிகளைப் பெற்று விளையாட்டுத்துறை தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. அந்த வகையில் மாணவர்களின் உடல், உள, சமூக, ஆன்மீக விருத்திகளை நோக்காகக் கொண்டு பல வேலைத் திட்டங்கள் தரம் 1 முதல் தரம் 13 வரை அனைத்து மாணவர்களுக்கும் மேற்கொள்ளப்படுகின்றன. விசேட செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் மாணவர்களுக்கு விளையாட்டின் மீதுள்ள ஆர்வத்தை அதிகரிக்கத் தேவையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்து எமது பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் கோட்டம், வலயம் என அடுத்த மட்டப் போட்டிகளில் சிறப்பாக பங்குபற்றினர். இவர்களின் விபரம்.

| பெயர் | விளையாட்டு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| வெ.வித்தியகலா | 400m | 02 | - |
| | 800 m | 01 | 01 |
| | 1500 m | 01 | 01 |

| | | | |
|---|---|---|---|
| செ.செனாலியாமதுபாஷினி | 1500 m | 03 | 03 |
| | 800 m | 02 | - |
| சே.துவாரகா | தட்டு வீசுதல் | 02 | - |
| ப.டிலக்சனா | 800 m | 02 | - |

இவர்களில் வெ.வித்தியகலா, மற்றும் செ.செனாலியாமதுபாஷினி ஆகியோர் எதிர்வரும் யூலைமாதம் இடம்பெறவுள்ள தடகள போட்டியில் பங்கு பெறவுள்ளனர். அடுத்து பெருவிளையாட்டுப் போட்டியில் ஆண் பெண்களுக்கான துடுப்பாட்டம், எல்லே ஆகிய போட்டிகளில் பங்குபற்றி சிறப்பாக விளையாடி ஆண்கள் எல்லே அணியினர் வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டு மகாணமட்டத்தில் பங்கு பற்றினர். எமது பாடசாலை அடுத்த நிலைகளில் விளையாட்டுத் துறையில் சாதனைகளைப் பெறுவதற்கு ஏதுவாக உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே ஆகிய பயிற்சிகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இனிவரும் காலங்களில் வெற்றியை நோக்கி பயணிப்போம் இதனைவிட மைலோ கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டம். DSI அனுசரணையுடன் கரப்பந்தாட்டம் சுற்றுப் போட்டியிலும் சிறப்பாகக் கலந்து விளையாடினார்கள்.

எமது பாடசாலையில் சாரணியத்தின் செயற்பாடு கடந்த வருடம் ஒரு புதிய உத்வேகத்தினை தந்துள்ளது. உலக சாரணியத்தின் குறிக்கோளை செயற்படுத்தும் வண்ணம் பல முயற்சி எடுக்கப்பட்டன. அத்துடன் பாடசாலை மட்ட செயற்பாடுகள், ஆலயங்களின் திருவிழாக்களில் கடமை போன்றன எமது சாரணிய அணியினரால் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் சாரணியத்தில் மாணவர்கள் இணைவை அதிகரிக்க பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எமது பாடசாலையில் இனிவரும் காலங்களில் சாரணியம் செயற்பாடுகள் புதிய பாதையில் பயணிக்கும் இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் அகும்.

# உயர்தர மாணவர் மன்றம் - 2017

பொறுப்பாசிரியர்கள் :- திரு. அ. பீற்றர்சந்தியா

திருமதி.ச.மோகனச்செல்வன்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | செல்வி. கு.குணதர்சி |
| உபதலைவர் | :- | செல்வி. இ.பானுஜா |
| செயலாளர் | :- | செல்வி. கு.அஜந்தா |
| பொருளாளர் | :- | செல்வி. வி. நிஷாந்தினி |

எமது பாடசாலையின் உயர்தர மாணவ மன்றமானது பாடசாலையில் நடைபெறும். அனைத்து விழாக்கள், நிகழ்வுகளை முன்னின்று நடத்துவதில் பெரும் பங்காற்றுகின்றது. சிறப்பாக வருடாவருடம் தமது உயர்தர மாணவர் ஒன்றுகூடலை நடாத்தி வருகின்றது. உயர்தர மாணவர்களை வழிப்படுத்தி தலைமைத்துவத்துடன் நெறிப்படுத்தும் ஒரு நிகழ்வாக இது காணப்படுகின்றது. அந்த வகையில் சென்ற வருடமும் 10.06.2017 அன்று உயர்தர மாணவர் ஒன்று கூடல் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி திரு. F.X.அன்ரன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் சிறந்த கருத்துரையையும் வழங்கினார். எமது பாடசாலையின் உயர்தர மன்றப் பொறுப்பாசிரியர்களும், மாணவர்களும் திறம்பட செயற்பட்டு இவ் வைபவத்தினை இனிதே நடாத்தியிருந்தனர்.

எமது மன்றத்தின் வளர்ச்சியில் அக்கறைய செலுத்தி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவரும் அதிபர், உப அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

எமது பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரிய நலன்புரிச் சங்கத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தும் சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகளைக் கௌரவித்தும், ஆசிரியர்களின் நலன்களைப் பேணியும் தனது பணியை வருடம் தோறும் சிறப்பாக நிறைவேற்றுகின்றது.

உயர்கல்விகளைப் பெற்று பட்டங்கள் பெறும் ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்தியும், இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பிரிவுபசார விழாக்களை நடாத்தியும், தனிப்பட்ட நிகழ்வுகளில் பங்கு கொள்வதினூடாகவும் ஆசிரியர்களிடையே நல்லுறவைப்பேணி வருகின்றது. ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி இரண்டு தினசரி பத்திரிகை களையும் கழகம் விநியோக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் எமது பாடசாலையில் "சிறுவர் தினத்தை" நிகழ்த்துவதற்கு எமது கழகம் அனுசரனை வழங்கிவருகின்றமையும் பாராட்டுவதற்குரிய விடயங்களாகும். கழகத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் கழகத்தின் சார்பில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திருமதி ச.மோகனச்செல்வன் |
| உபதலைவர் | :- | திருமதி மீரா மகேந்திரன் |
| செயலாளர் | :- | திருமதி சி.யஸ்ரஸ் |
| உபசெயலாளர் | :- | திருமதி க.சத்தியகுமார் |
| பொருளாளர் | :- | திருமதி சு.செந்தூரன் |

## ஆலோசனை வழிகாட்டல் அலகு 2017 – 2018

1. தரம் 3 மாணவர்களுக்கு "மகிழ்வுடன் கற்போம்" செயற்பாட்டில் சுகவாழ்வு நிலையத்தைச் சேர்ந்த திருமதி. தி.வான்சலின் மூலம் உளநலம் பேணுவதற்கான விளையாட்டுச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

2. தரம் 9, தரம் 11, தரம் 12 மாணவர்களுக்கு பாடத்தெரிவு மற்றும் உயர்கல்வி வாய்ப்பு தொடர்பான செயலமர்வு ஜெ. ஹஸ்ரன் றோய் அவர்களால் நடாத்தப்பட்டது.

3. “மன நலம் காப்போம்” எனும் கருப்பொருளில் திரு.கு.பாலசண்முகன் (ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி) அவர்களால் தரம் 6-13 வகுப்பு மாணவர்களுக்கு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

4. தரம் 10, தரம் 12 மாணவர்கள் 15 பேருக்கு யாழ் பிராந்திய பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் தியானப்பயிற்சி அடிப்படைக் கற்கைகள் 8 அமர்வுகளில் நடாத்தப்பட்டது.

5. உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கிய கண்காட்சியில் இராஜயோக தியான பாடவிளக்கம் ஆரோக்கிய உணவு, உளநல ஆற்றுப்படுத்துகை விளையாட்டுக்கள், மூலிகைத்தாவரங்கள், போதை ஒழிப்பு விளக்கம் என்பன சகல மாணவர்களும் பயன்பெறும் வகையில் நடாத்தப்பட்டன.

6. வசந்தம் விசன் நிதியத்தினரால் மாணவர்கள் “சுயபாதுகாப்பு விழிப்புணர்வு” செயற்பாட்டுடனான கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. தரம் 8-12 வகுப்பு மாணவிகள் கலந்து பயனடைந்தனர்.

7. சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியர் அவர்களால் தரம் 11 மாணவர்களுக்கு பரீட்சைக்கு தயாராவது எப்படி? என்ற தலைப்பில் விரிவுரை நடாத்தப்பட்டது.

8. கிளிநொச்சியில் வடமாகாண வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவினரால் நடாத்தப்பட்ட உயர்கல்வி வாய்ப்பு, தொழில் வழிகாட்டல் கண்காட்சியில் தரம் 10,11.12,13 வகுப்பு மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர்.

9. யாழ் போதனா வைத்தியசாலைக்கு கண் பரிசோதனைக்கு 20 மாணவர்களை அழைத்துச் சென்று வைத்திய அறிக்கை பெறப்பட்டதுடன் மூக்கு கண்ணாடி பெற்றுக் கொள்வதற்கு வலயக் கல்விப் பணிமனை மூலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

**பொறுப்பாசிரியர் - திருமதி எழில்வேந்தன்**

## பாடசாலையின் அவசிய தேவைகள்

1. எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு அமைவிடம் பாதுகாப்பற்றதாகக் காணப்படுவதனால் மதிலும் ஒரு பகுதிக்கு வேலியும், அமைத்தல் அவசியமாகும்.
2. பாடசாலையின் பிரதான நுழைவாயிலை புனரமைத்தல்
3. பாடசாலையின் மேற்குப் புறமாக உள்ள மதிலை முழுமையாகக் கட்டுதல்
4. ஆரம்பப் பிரிவுக்கு நீர் விநியோகத்தை சீராக்க நீர்த் தாங்கி அமைத்தல்

## மாணவர் பாராளுமன்றம் 2018

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம் 2016ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் பல அமர்வுகள் அமைச்சினாலும் பல செயற்திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. அச்செயற்திட்டங்களில் சில

1. விவசாய அமைச்சினால் நஞ்சற்ற மரக்கறி உற்பத்தி வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது.
2. கல்வி அமைச்சினால் மெல்லக் கற்போருக்கான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
3. சமூகத் தொடர்பாடல் அமைச்சினால் எமது அயலில் உள்ள முதியோர் இல்லத்தரிசிப்பும் அங்கு அவர்களுக்கான அன்பளிப்புக்களை சேகரித்து வழங்கியமையும் ஆடல்பாடல் மூலம் அவர்களை மகிழ்வித்தமையும் குறிப்பிடத்தக்கன.

இதுபோன்ற செயற்திட்டங்களை மேற்கொள்ள 2018 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் பாராளுமன்றம் அமையப் பெற்றுள்ளது. அதன் செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் நல்ல முறைகளில் தொடரும்.

**மாணவர் பாராளுமன்றம் 2018 உறுப்பினர் விபரம்**

| | |
|---|---|
| சபாநாயகர் | செல்வி தி.தினுஜா |
| சபைமுதல்வர் | செல்வன் சே.கோகுலன் |
| பிரதமர் | செல்வி மி.காயத்திரி |

பிரதிச்சபாநாயகர் செல்வி செ.தனுசியா

பிரதி செயற்குழுத்தலைவர் செல்வன் யே விதுசன்

**அமைச்சர்கள்**

1. கல்வி அமைச்சர் செல்வி ஏ.சலோமி
   பிரதி அமைச்சர் செல்வி செ.மிதுஜா
2. வளப்பாதுகாப்பு அமைச்சர் செல்வி ச.சஜந்தினி
   பிரதி அமைச்சர் செல்வன் வி.சிமியோன்
3. சமூக நலன்நோன்பு அமைச்சர் செல்வன் றொ.மதுஷன்
   பிரதி அமைச்சர் செல்வி றொ.மேரிசுதர்சினி
4. ஒழுக்க விழுமிய அமைச்சர் செல்வி ர.சாளினி
   பிரதி அமைச்சர் செல்வி சி.சுகந்தினி
5. விவசாய அபிவிருத்தி அமைச்சர் செல்வன் சி.திலக்சன்
   பிரதி அமைச்சர் செல்வன் சி.சிவநேசன்
6. சமூகத் தொடர்பாடல் அமைச்சர் செல்வன் வி.வினோத்
   பிரதி அமைச்சர் செல்வன் பி.நிறோஜன்
7. கலாசார அபிவிருத்தி அமைச்சர் செல்வி கு.துஷானா
   பிரதி அமைச்சர் செல்வி ஜெ.அபிநயா
8. விளையாட்டுத்துறை அபிவிருத்தி செல்வன் ச.சுதர்சன்
   பிரதி அமைச்சர் செல்வன் கெ.ரவிராஜ்
9. சுகாதார அமைச்சர் செல்வி ப.டிலக்சனா
   பிரதி அமைச்சர் செல்வி ஜெ.தனுசியா
10. பாடசாலைகளுக்கிடையிலான
    நட்புறவு அபிவிருத்தி அமைச்சர் செல்வி க.கிறிஸ்ரியாள்
    பிரதி அமைச்சர் செல்வன் அ.எபிநேசன்
    பிரதிச்செயலாளர் நாயகம் திரு.சு.சுதாகர் (அபிவிருத்தி)
    திரு.வ.சுந்தரராஜன் (ஒழுக்கம்)
    திருமதி.சு.ஜமுனாதரன்(நிர்வாகம்)

# Mother Sri Lanka Project Run

கல்வி அமைச்சுடன் இணைந்து நாட்டின் பாடசாலை வலையமைப்பில் Project Run என்ற பெயரில் ஒரு விஷேட கருத்திட்டத்தை Mother ஸ்ரீ லங்கா அமுல்படுத்தி வருகிறது. இலங்கை மாணவர் சமூகத்திற்கு தம்மாலான தாய்நாட்டிற்கு ஆற்றப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றும் பொறுப்புள்ள பிரஜைகளாக மாற அனுபவங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பொறுப்புள்ள பிரஜாவுரிமை, ஒற்றுமை, தேசாபிமானம் என்ற மூன்று தொனிப் பொருளின் கீழ் நீண்டகால பிரயோக ரீதியான ஒரு நிகழ்ச்சித் திட்டமாக பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து 2014ம் ஆண்டில் முதல்முறையாக நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் பெறப்பட்டு தற்போது மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய சார்பில் கடந்த 2018/05/06ம் திகதி கலந்து ஆற்றுகையை மேற்கொள்கின்றோம்.

மேலும் கடந்த 2017ம் ஆண்டு June மாதம் தொடங்கிய எமது செயற்திட்டம் "நஞ்சற்ற மரக்கறிகளை உலக உணவு மதிய உணவிற்கு வழங்குதல்" என்னும் தொனி முறைப்படுத்தப்பட்டு தற்போது பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்வரும் 2020 வரை செயற்படும் வண்ணம் செயற்படுத்தப்படுகின்றது.

**2017 – 2018 வரையான செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | திரு. இ.வித்தியானந்தன் |
| பிரதம ஆலோசகர் | திரு. K.K.தவகீஸ்வரன் |
| மதப்பிரதிநிதி | திரு. B.சுந்தரராஜன் |
| பிரதிஅதிபர் | திரு. இ.ராஜ்கரன் |
| தலைவர் | செல்வி. ர.தஜேந்தினி |
| செயலாளர் | செல்வி. S. துவாரகா |
| பொருளாளர் | செல்வி. S. சுகந்தினி |
| உபபொருளாளர் | செல்வி. P.தினுஜா |
| உபதலைவர் | செல்வன் K.ரவிராஜ் |
| உபசெயலாளர் | செல்வன் R.றொபின் சுதர்சன் |

**குழு உறுப்பினர்கள்**

E. ஜெனிஸ்ரன்

ப.ஜெயலக்ஷன்

P.நிரோஜன்

சு. சங்கீதா

B.கௌதம்

A.பிரசாந்

N.சதுர்சன்

P. கிந்துஜன்

S. சஞ்சீவன்

## யோகர் சுவாமி நிதியம்

எமது பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் யோகர்சுவாமி நிதியத்தின் நிலையான வைப்பிலிருந்து கிடைக்கும் வட்டிப்பணம் பரிசளிப்பு விழாவிற்கும், யோகர் சுவாமிகளின் குருபூசை தினத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில்

1. ஒவ்வொரு பாடத்திலும் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கான பணப்பரிசினை வழங்குதல்
2. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் (5A தரச்சித்திக்கு மேல்) மாணவர்களுக்கு பணப்பரிசாக ரூ 4000 வழங்குதல்
3. பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் செல்லும் மாணவர்களுக்குமான ரூபா 5000.00 பணப்பரிசு வழங்குதல்
4. தரம் 5ம் புலமைப்பரிசில், பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு ரூபா 2000 பணப்பரிசு வழங்குதல்
5. இப்பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தொடர்ந்தும் இங்கு கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு 2000பணப்பரிசு வழங்குதல்
6. பரிசளிப்பு நிகழ்விற்கான அறிக்கைப் புத்தகம், சான்றிதழ் என்பவற்றிற்குப் பயன்படுத்தல்

## யோகர் சுவாமி நிதிய உறுப்பினர் விபரம்

1. தலைவர் : திரு.க. க. தவகீஸ்வரன் (அதிபர்)
2. செயலாளர் : திரு.வி.மாணிக்கம்
3. பொருளாளர் : திரு.இ.ராஜ்கரன் (பிரதிஅதிபர்)

**உறுப்பினர்கள்**

1. திருமதி.செ. பாலகிருஷ்ணன்
2. திரு.பா. இராம்பிரகாஷ்
3. திருமதி வ.சிவபாலன்
4. திருமதி.த.ஞானப்பிரகாசம்
5. திருமதி க.சோதிதாசன்
6. திரு.வ.சுந்தரராஜன்
7. திரு.பா. அருண்பிரகாஷ்

## பாடசாலைக்குக் கிடைத்த உதவிகள்

- பழைய மாணவர்களாகிய திரு.கந்தசாமி சம்பந்தன் திரு.எஸ்.சிவநாதன் ஆகியோரால் 2016ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு மாதமும் ஐந்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை மேம்படுத்துவதற்காக ரூபா 149100/- (நூற்று நாற்பத்தொன்பதாயிரத்து நூறு) அன்பளிப்பு செய்யப்படுகின்றது.
- பழைய மாணவரும் தற்போது நோர்வேயில் வசித்து வருபவருமாகிய திரு.சி.ரமேஸ் அவர்களால் பாடசாலை மாணவி ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 500/- (ஐந்நூறு) வழங்கப்படுகின்றது.
- பரராஜசிங்கம் மகேஸ்வரி நிதியத்தின் மூலம் திரு.ப.வசந்தகுமார் அவர்கள் மலசலகூட சுத்திகரிப்பு, மின்சாரம், மாணவர் பாராளுமன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 38000/- (முப்பத்தெட்டாயிரம்) வழங்கியுள்ளார்.
- பழைய மாணவி திருமதி வ.சந்திரன் அவர்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்காக ரூபா 6000/- வழங்கப்பட்டது.
- பாடசாலையின் பழைய மாணவரும் சமூக சேவையாளருமாகிய திரு.கந்தையா சிவயோகேஸ்வரன் அவர்களால் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசில் தின விழாவிற்கான மதியபோசன செலவினை வழங்கியுள்ளார்.

## 2018 ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டிக்கு உதவி வழங்கியவர்கள்

- பாடசாலை பழைய மாணவர்கள் ரூபா 64000 (அறுபத்துநான்காயிரம்)
- திரு.E.S.P.நாகரத்தினம் (கஜமுகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) ரூபா 5000/-
- செல்வி கு.சோதிநாயகி (பழைய மாணவி) ரூபா 5000
- திருமதி. மே. டொ. றொ. புவனேந்திரன் (ஆசிரியர்) ரூபா 3000
- திரு. அ. கிருபாகரன் (கிருபா லேணர்ஸ் உரிமையாளர்) ரூபா 15000
- திரு. அ. திருநீலகண்டன் 12 (பன்னிரண்டு) மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை ஒவ்வொரு வருடமும் வழங்கி வருகின்றார்
- திரு. மு. ஜெயமோகன் (பழைய மாணவரும் அமெரிக்காவில் வசிப்பவர் ரூபா 20000 அன்பளிப்புச் செய்துள்ளார்.
- வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு.விந்தன் கனகரத்தினம் பாடசாலை தோட்டக்காணிக்கு மதில் கட்டுவதற்கு ரூபா 150000/- (நூற்றைம்பதாயிரம்) மாகாண சபையால் ஒதுக்கீடு செய்துள்ளார்.
- தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் சமூகஜோதி திரு.வா.தியாகேந்திரன் பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவினருக்கான சீருடைகளை வழங்கியுள்ளார்.
- திரு.ச. சுந்தரலிங்கம் (ஓய்வு நிலை தபால் அதிபர்) அவர்கள் தமது பாரியாரின் ஞாபகார்த்தமாக ஆங்கில நூல்கள், இடைநிலை, உயர்தரத்திற்கான தமிழ்நூல்கள் மின்மணி என்பவற்றை வழங்கியுள்ளார்

# நன்றியுரை

வருடம்தோறும் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு நிதி உதவிகளை மனமுவந்து வழங்குகின்ற யோகர் சுவாமிகள் நிதிய அன்பர்கள் எம் நன்றிக்குரியவர்கள். இவ்வேளையில் அவர்தம் குடும்பத்தினருக்கு முதற்கண் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது அன்பான அழைப்பை ஏற்று இன்றைய நிகழ்வின் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினரான உயர்திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கும் அவர்தாம் பாரியார் திருமதி மீனா சித்தார்தன் அவர்களுக்கும் எமது விழாவை சிறப்பித்துள்ளதுடன் மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கிக் கௌரவித் துள்ளீர்கள். உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய நிகழ்வின் சிறப்புவிருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற எமது யாழ் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தர்மிகா மோகனராஜ் அவர்களே, நாம் அழைத்தபோது இன்முகத்துடன் வருகை தந்தீர்கள். தங்களின் வருகையால் நாம் மகிழ்ச்சியடைந்துள்ளோம். உங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பல வகைகளிலும் பங்களிப்புச் செய்கின்ற கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இவ்வேளையில் நான் நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இந்நூலினை கணினியில் வடிவமைத்து நூலுருவாக்கித் தந்த மெகா பதிப்பகத்தினருக்கும், புகைப்படப் பிடிப்பாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளிலும் என்னோடு செயற்பட்டுக்கொண்டிக்கின்ற பிரதி அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி, நன்றி கூறி எனது பரிசளிப்பு விழா அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

வணக்கம்

| SUBJECT WISE PERFORMANCE G.C.E.O/L - 2017 | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **NO** | **SUBJECT** | **NUMBER OF STUDENT** | **A** | **B** | **C** | **S** | **W** | **PASS** | **PASS %** |
| 1 | Saivanery | 22 | 5 | 5 | 7 | 4 | 1 | 21 | 95 |
| 2 | Catholiciam | 10 | 3 | 3 | 2 | | 2 | 8 | 80 |
| 3 | Christianity | 2 | 1 | | 1 | | | 2 | 100 |
| 4 | Tamil Language | 34 | 4 | 10 | 14 | 3 | 3 | 31 | 91 |
| 5 | English | 34 | | | 1 | 4 | 29 | 5 | 15 |
| 6 | Mathermatics | 34 | | 1 | 2 | 12 | 19 | 15 | 44 |
| 7 | History | 34 | | 2 | 7 | 13 | 12 | 22 | 65 |
| 8 | Science | 34 | 4 | 3 | 11 | 7 | 9 | 25 | 74 |
| **1st Subject Group** | | | | | | | | | |
| 9 | Business & Accounting | 6 | | 1 | 1 | 4 | | 6 | 100 |
| 10 | Geography | 10 | | | 5 | 4 | 1 | 9 | 90 |
| 11 | Citizenship Education | 17 | | | 3 | 8 | 6 | 11 | 65 |
| **2nd Subject Group** | | | | | | | | | |
| 12 | Music (Carnatic) | 5 | 1 | 2 | 1 | 1 | | 5 | 100 |
| 13 | Art | 13 | | 1 | 8 | 4 | | 13 | 100 |
| 14 | Dancing (Bharatha) | 11 | 1 | 5 | 4 | 1 | | 11 | 100 |
| 15 | Tamil Literary | 1 | | 1 | | | | 1 | 100 |
| **3rd Subject Group** | | | | | | | | | |
| 16 | Information & Communication Technology | 3 | | | 2 | 1 | | 3 | 100 |
| 17 | Home Economics | 1 | | | | 1 | | 1 | 100 |
| 18 | Health & Physical Education | 17 | 2 | 5 | 7 | 2 | 1 | 16 | 94 |

# G.C.E O/L Result Analysis





































Art(43)
100
50
0
2013
2014
2015
2016
2017


Dance(45)
200
100
0
20132014201520162017


Tamil Literature (48)
200
100
0
2013
2014
2016
2017


Information Communication Technology (80)
120
100
80
60
40
20
0
2013
2014
2015
2016
2017


Agriculture(81)
100
80
60
40
20
0
2013
2014
2015
2017


Home Economics(85)
105
100
95
90
85
2013
2014
2015
2016
2017


Health Science(86)
105
100
95
90
85
80
75
2013
2014
2015
2016
2017

# G.C.E A/L Result Analysis



























## STAFF NAME LIST - 2018

| இல | பெயர் | தகைமை | ஆசி.வகுதி |
|---|---|---|---|
| 1 | திரு. க. க. தவகீஸ்வரன் | B.A (Hons),Dip.in Ed, M.Ed | S.L.P.S 2 |
| 2 | திரு. இ.ராஜ்கரன் | B.A, Dip.in Ed | S.L.P.S.III |
| 3 | திரு. பொ. சர்வானந்தன் | BA, Dip. in Edu, M.Ed | S.L.T.S1 |
| 4 | திரு. சு. சுதாகர் | BA, Dip. in Ed | S.L.T.S 2-I |
| 5 | திரு. வ. சுந்தரராஜன் | BA, Dip. in Ed | S.L.T.S 2-I |
| 6 | திரு. அ. பீற்றர் சந்தியா | Tea. Trained, BA | S.L.T.S 2-I |
| 7 | திரு. பே. அருட்செல்வன் | B.Ed, Maths Trained | S.L.T.S 2-I |
| 8 | திரு. யோ. முகுந்தன் | BA, Dip.in Ed | S.L.T.S 2 -II |
| 9 | திரு. த. குமாரதாசன் | B.Ed, Maths Trained | S.L.T.S 2 -II |
| 10 | திரு. இ. வித்தியானந்தன் | BA, Dip.in Edu, M.Ed | S.L.T.S 2-II |
| 11 | திரு. ச. யோகேஸ்வரன் | Tea. Trained, Dip.in Phy. Ed | S.L.T.S 3-II |
| 12 | திரு. க. ஜெயராஜா | B.Ed | S.L.T.S 2-I |
| 13 | திரு. ந. லிங்கேஸ்வரன் | B.Ed, Maths Trained | S.L.T.S 2-I |
| 14 | திருமதி. சி. யஸ்ரஸ் | Tea. Trained | S.L.T.S 1 |
| 15 | திருமதி. சு. செல்வரட்ணம் | BA, Dip.in Ed Trained (eng) | S.L.T.S 1 |
| 16 | திருமதி. த. எழில்வேந்தன் | B.Sc, Dip.in Ed | S.L.T.S 1 |
| 17 | திருமதி. மீ. மகேந்திரன் | BA, Dip.in Edu, M.Ed | S.L.T.S 1 |
| 18 | திருமதி. குயின் ஆன்ஜோஜியானா | Tea. Trained | S.L.T.S 1 |
| 19 | திருமதி. பு. அ. இமானுவல் | Tea. Trained | S.L.T.S 1 |
| 20 | திருமதி. ந. ரவீந்திரன் | B.Com, Dip.in Ed | S.L.T.S 1 |
| 21 | திருமதி. ஜெ. இ. றெவல் | Dip.in Mus, Dip.in Ed | S.L.T.S 1 |
| 22 | திருமதி. சா. நாகேஸ்வரன் | Bed Primary Trained | S.L.T.S 2-I |
| 23 | திருமதி. சீ. ஜெயக்குமார் | Tea. Trained | S.L.T.S 1 |
| 24 | திருமதி. தி. கணேஸ்வரன் | B.A, Dip.in.Ed, Trained Ag | S.L.T.S 1 |
| 25 | செல்வி. அ. ஜெனிதா | Eng. Trained | S.L.T.S 2-II |
| 26 | திருமதி. சு. ஜமுனாதரன் | Tea. Trained | S.L.T.S 2-I |
| 27 | திருமதி. க. சத்தியகுமார் | B.A (Hons) | S.L.T.S 2-II |
| 28 | திருமதி சு. செந்தூரன் | Dip.in. Teaching (Sci), B.Ed | S.L.T.S 2-I |
| 29 | திருமதி. மே.டொ.றெ.புவனேந்திரன் | Tea. Trained | S.L.T.S 2-II |
| 30 | செல்வி. த. மதனகாந்தி | Bed Primary Trained | S.L.T.S 2-I |
| 31 | திருமதி. ச. மோகனச்செல்வன் | BA (Hons),Dip.in Ed | S.L.T.S 2-I |
| 32 | திருமதி. து. சுகுமார் | Dip.in. Teaching (Eng),B.Ed | S.L.T.S 2-II |
| 33 | திருமதி. கௌ. மதனகோபன் | Dip.in. Teaching (Spl.Ed) | S.L.T.S 2-II |
| 34 | திருமதி. வி. சிவலோகநாதன் | B.FA (Dance) | S.L.T.S-2-I |
| 35 | திருமதி. இ.ரஞ்சன் | H.Eco. Trained | S.L.T.S-2-I |
| 36 | திருமதி. வ. கஜந்தன் | Dip.in. Teaching (Sci) | S.L.T.S-2-II |

| | | | |
|---|---|---|---|
| 37 | திருமதி. மெ. றோபின்சன் | Tea. Trained | S.L.T.S-2-II |
| 38 | திருமதி.க.இராஜமோகன் | G.C.E(A/L) | S.L.T.S-3-II |
| 39 | திருமதி. இ. சுகந்தினி | BA, Dip.in Mus, Dip.in Ed | S.L.T.S 1 |

**NON ACCADAMIC STAFF**

| | |
|---|---|
| 40 | திரு. வ. பிரதீபன் |
| 41 | திரு. ந. நவநிலவன் |

**TEMPERARY TEACHER**

| | |
|---|---|
| 42 | திருமதி. இ. சிவகுமார் |
| 43 | திருமதி. ஙு. றெ. மோகனதாஸ் |

**Spl. Education Teacher Assistant**

| | |
|---|---|
| 44 | செல்வி. இ. நீரஜா |

# ஆரம்பப்பிரிவு

## தரம் - 01

**கா.சஞ்சய்**

| | |
|---|---|
| தமிழ | 1ம் இடம் |
| கணிதம் | 1ம் இடம் |
| சுற்றாடல் | 1ம்இடம் |
| சைவசமயம் | 1ம் இடம் |

**தி.ஜெரோன்**

| | |
|---|---|
| தமிழ் | 2ம் இடம் |
| சுற்றாடல் | 3ம் இடம் |
| கத்தோலிக்கம் | 3ம் இடம் |

**றெ.ஜெனிதா**

| | |
|---|---|
| கத்தோலிக்கம் | 1ம் இடம் |
| சுற்றாடல் | 2ம் இடம் |
| கத்தோலிக்கம் | 3ம் இடம் |

**சு.தனுஸ்கா**

| | |
|---|---|
| கணிதம் | 1ம் இடம் |
| கத்தோலிக்கம் | 2ம் இடம் |

**ற.மேஷாக்**

| | |
|---|---|
| கணிதம் | 3ம் இடம் |

**அ.கிருஸ்ணராஜ்**

| | |
|---|---|
| சைவசமயம் | 2ம் இடம் |

**ஜே. சஞ்சீவன்**

| | |
|---|---|
| சைவசமயம் | 3ம் இடம் |

## தரம் - 02

**அ. அஸ்மிதன்**

| | |
|---|---|
| சுற்றாடல் | 1ம் இடம் |
| கத்தோலிக்கம் | 1ம் இடம் |
| கணிதம் | 2ம் இடம் |
| தமிழ் | 3ம் இடம் |

**ச.டிலக்சனா**

| | |
|---|---|
| தமிழ் | 1ம் இடம் |
| சுற்றாடல் | 2ம் இடம் |
| சைவசமயம் | 2ம் இடம் |

**செ. லிவுசன்**

| | |
|---|---|
| கணிதம் | 1ம் இடம் |
| சைவசமயம் | 2ம் இடம் |
| சுற்றாடல் | 3ம் இடம் |

**சி.கம்சலா**

| | |
|---|---|
| தமிழ் | 2ம் இடம் |

**ஜெ.சஞ்சய்**

| | |
|---|---|
| கணிதம் | 3ம் இடம் |

**தி. நர்மதா**

| | |
|---|---|
| சைவசமயம் | 3ம் இடம் |

**ஜ.சாருஜன்**

| | |
|---|---|
| கத்தோலிக்கம் | 2ம் இடம் |

**சி. நிரோஜினி**

| | |
|---|---|
| கத்தோலிக்கம் | 3ம் இடம் |

## தரம் - 03

### கா. துஸ்யந்தன்

| | | |
|---|---|---|
| தமிழ் | 1ம் | இடம் |
| கணிதம் | 1ம் | இடம் |
| சுற்றாடல் | 1ம் | இடம் |
| ஆங்கிலம் | 1ம் | இடம் |
| சைவசமயம் | 1ம் | இடம் |

### பா. கௌசிக்

| | | |
|---|---|---|
| கணிதம் | 2ம் | இடம் |
| தமிழ் | 3ம் | இடம் |
| ஆங்கிலம் | 3ம் | இடம் |
| சைவசமயம் | 3ம் | இடம் |

### ச.சஞ்சீபா

| | | |
|---|---|---|
| தமிழ் | 2ம் | இடம் |
| சுற்றாடல் | 2ம் | இடம் |
| சைவசமயம் | 2ம் | இடம் |
| கணிதம் | 3ம் | இடம் |

### ய.யுவின்

| | | |
|---|---|---|
| சுற்றாடல் | 3ம் | இடம் |
| கத்தோலிக்கம் | 3ம் | இடம் |

### வி.டனுசன்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | 2ம் | இடம் |

### அ.அரவிந்தன்

| | | |
|---|---|---|
| கத்தோலிக்கம் | 2ம் | இடம் |

### சி.கஜலக்சிகா

| | | |
|---|---|---|
| கத்தோலிக்கம் | 1ம் | இடம் |

## தரம் - 04

### சு. சிலம்பரசன்

| | | |
|---|---|---|
| தமிழ் | 1ம் | இடம் |
| கணிதம் | 1ம் | இடம் |
| சுற்றாடல் | 1ம் | இடம் |
| ஆங்கிலம் | 1ம் | இடம் |
| கத்தோலிக்கம் | 1ம் | இடம் |

### செ. தஸ்மினி

| | | |
|---|---|---|
| சைவசமயம் | 1ம் | இடம் |
| தமிழ் | 2ம் | இடம் |
| கணிதம் | 2ம் | இடம் |
| சுற்றாடல் | 2ம் | இடம் |
| ஆங்கிலம் | 2ம் | இடம் |

### செ.டிலக்சனா

| | | |
|---|---|---|
| சைவசமயம் | 2ம் | இடம் |
| தமிழ் | 3ம் | இடம் |
| சுற்றாடல் | 3ம் | இடம் |
| ஆங்கிலம் | 3ம் | இடம் |

### ஜ.நிதர்சிகா

| | | |
|---|---|---|
| சைவமயம் | 3ம் | இடம் |

### நா.பபிசாளினி

| | | |
|---|---|---|
| கணிதம் | 3ம் | இடம் |

### கு.சஜீபன்

| | | |
|---|---|---|
| கத்தோலிக்கம் | 2ம் | இடம் |

### ர.சலோமி

கத்தோலிக்கம்3ம் இடம்

## தரம் - 05

**இ. சுமித்திரா**
தமிழ் 1ம் இடம்
கணிதம் 1ம் இடம்
சுற்றாடல் 1ம் இடம்
கத்தோலிக்கம் 1ம் இடம்
ஆங்கிலம் 2ம் இடம்

**ர.ரக்ஷனா**
கணிதம் 1ம் இடம்
சுற்றாடல் 2ம் இடம்
ஆங்கிலம் 2ம் இடம்
தமிழ் 2ம் இடம்

**யே. ஜினோசன்**
தமிழ் 3ம் இடம்

**பொ.காயத்திரி**
ஆங்கிலம் 1ம் இடம்
சைவசமயம் 3ம் இடம்

**றொ. யாழினி**
சைவமயம் 1ம் இடம்

**ஜெ.திருவரசன்**
சைவமயம் 2ம் இடம்

**த.கபிசன்**
கத்தோலிக்கம் 2ம் இடம்

**செ.எமன்சியா**
கத்தோலிக்கம் 3ம் இடம்

**செ. கினஸ்ரன்ராஜ்**
சுற்றாடல் 3ம் இடம்

## தரம் - 06

**ப. டயாளன்**

| | | |
|---|---|---|
| கணிதம் | 1ம் | இடம் |
| ஆங்கிலம் | 1ம் | இடம் |
| சைவசமயம் | 1ம் | இடம் |
| விஞ்ஞானம் | 1ம் | இடம் |
| சுகாதாரம் | 1ம் | இடம் |
| P.T.S. | 2ம் | இடம் |
| சங்கிதம் | 2ம் | இடம் |
| வரலாறு | 2ம் | இடம் |
| புவியியல் | 3ம் | இடம் |
| தமிழ் | 3ம் | இடம் |

**ற. யானுயா**

| | | |
|---|---|---|
| வரலாறு | 1ம் | இடம் |
| புவியியல் | 1ம் | இடம் |
| தமிழ் | 2ம் | இடம் |
| கணிதம் | 2ம் | இடம் |
| நடனம் | 2ம் | இடம் |
| சைவசமயம் | 3ம் | இடம் |
| விஞ்ஞானம் | 3ம் | இடம் |
| ஆங்கிலம் | 3ம் | இடம் |

**ர. பிரியங்கா**

| | | |
|---|---|---|
| தமிழ் | 1ம் | இடம் |
| சங்கீதம் | 1ம் | இடம் |
| ஆங்கிலம் | 2ம் | இடம் |
| சைவசமயம் | 2ம் | இடம் |
| சுகாதாரம் | 2ம் | இடம் |
| குடியுரிமை | 3ம் | இடம் |

**ஆ. அமல அபிஷென்**

| | | |
|---|---|---|
| சித்திரம் | 1ம் | இடம் |
| குடியுரிமை | 1ம் | இடம் |
| கத்தோலிக்கம் | 1ம் | இடம் |
| புவியியல் | 2ம் | இடம் |
| வரலாறு | 3ம் | இடம் |
| கணிதம் | 3ம் | இடம் |

**க.அனுஷா**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | 2ம் | இடம் |
| கத்தோலிக்கம் | 2ம் | இடம் |
| குடியுரிமை | 2ம் | இடம் |
| சங்கீதம் | 3ம் | இடம் |
| சுகாதாரம் | 3ம் | இடம் |

**ஜ. அனுஷா**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | 2ம் | இடம் |
| கத்தோலிக்கம் | 2ம் | இடம் |
| குடியுரிமை | 2ம் | இடம் |
| சங்கீதம் | 3ம் | இடம் |
| சுகாதாரம் | 3ம் | இடம் |

**சு. தனுசன்**

N.R.C. 1ம் இடம்

**பி. மிதுஷா**

N.R.C. 2ம் இடம்

**ஶ்ரீ. நதீசன்**

P.T.S. 3ம் இடம்

**த. ஆகாஸ்**

N.R.C. 3ம் இடம்

## தரம் - 07

**நி.திவ்வியா**

தமிழ் 1ம் இடம்
கணிதம் 3ம் இடம்
வரலாறு 1ம் இடம்
குடியுரிமை 2ம் இடம்
சைவம் 1ம் இடம்

**நி.வினோதினி**

ஆங்கிலம் 2ம் இடம்
புவியியல் 2ம் இடம்
சுகாதாரம் 3ம் இடம்
சைவம் 3ம் இடம்
P.T.S 2ம் இடம்
வரலாறு 3ம் இடம்

**ஜெ.பிருத்திகா**

நடனம் 1ம் இடம்

**பி.கஜதீபன்**

தமிழ் 2ம் இடம்
கணிதம் 2ம் இடம்
விஞ்ஞானம் 1ம் இடம்
வரலாறு 2ம் இடம்
புவியியல் 1ம் இடம்
சுகாதாரம் 1ம் இடம்
குடியுரிமை 1ம் இடம்
PTS 1ம் இடம்
சங்கீதம் 2ம் இடம்
சைவம் 2ம் இடம்

**அ. அனோஜினி**

தமிழ் 3ம் இடம்
ஆங்கிலம் 1ம் இடம்
கணிதம் 1ம் இடம்
சுகாதாரம் 2ம் இடம்
R.C. 1ம் இடம்
சங்கீதம் 1ம் இடம்

**வி.சரண்**

ஆங்கிலம் 3ம் இடம்
வரலாறு 3ம் இடம்
PTS 3ம் இடம்
சங்கீதம் 3ம் இடம்

**சு. லஜீபன்**

விஞ்ஞானம் 2ம் இடம்

**ம.டிலக்சன்**

விஞ்ஞானம் 3ம் இடம்
குடியுரிமை 3ம் இடம்
R.C. 2ம் இடம்

**ஜ.சந்தியா**

புவியியல் 2ம் இடம்
நடனம் 2ம் இடம்

**றொ.கர்ஷாந்**

R.C. 3ம் இடம்

**அ.சுபானா**

NRC 2ம் இடம்
Art 3ம் இடம்

**லெ.சோபியா**

NRc 2ம் இடம்
நடனம் 3ம் இடம்

**D. மெனுஷா**

NRC 3ம் இடம்

**க.தபேசன்**

Art 3ம் இடம்

**நா.அபிநயா**

Art 1ம் இடம்

## தரம் - 08

**ஹென்றிகுலாஸ் ரவிராஜ்**
கணிதம் 3 ம் இடம்
விஞ்ஞானம் 3 ம் இடம்
ஆங்கிலம் 3 ம் இடம்
வரலாறு 1 ம் இடம்
புவியியல் 1 ம் இடம்
சுகாதாரம் 1 ம் இடம்
சித்திரம் 1 ம் இடம்
கத்தோலிக்கம் 3 ம் இடம்
குடியுரிமை 1 ம் இடம்

**இவோன் சாம்சன்**
தமிழ் 1 ம் இடம்
விஞ்ஞானம் 2 ம் இடம்
சுகாதாரம் 2 ம் இடம்
சித்திரம் 2 ம் இடம்
கத்தோலிக்கம் 1 ம் இடம்

**ஜெயக்குமார் வருண்**
கணிதம் 1 ம் இடம்
வரலாறு 2 ம் இடம்
சங்கீதம் 2 ம் இடம்
சைவசமயம் 3 ம் இடம்
குடியுரிமை 2 ம் இடம்

**பார்த்தீபன் நிரோஜன்**
தமிழ் 3 ம் இடம்
கணிதம் 2 ம் இடம்
ஆங்கிலம் 2 ம் இடம்

**மோகன்ராஜ் அலன்ஸ்ரீபன்ராஜ்**
சங்கீதம் 3 ம் இடம்
சுகாதாரம் 3 ம் இடம்
கத்தோலிக்கம் 1 ம் இடம்

**அன்ரனி கிறிஸ்ரி நிஷான்**
கத்தோலிக்கம் 3 ம் இடம்

**லக்ஷிகா சுதாகரன்**
விஞ்ஞானம் 1 ம் இடம்
ஆங்கிலம் 1 ம் இடம்
வரலாறு 2 ம் இடம்
புவியியல் 2 ம் இடம்
செ.தொழினுட்பம் 1 ம் இடம்
சித்திரம் 3 ம் இடம்

**அபிநயா ஜெகதீஸ்வரன்**
தமிழ் 2 ம் இடம்
சங்கீதம் 1 ம் இடம்
செ.தொழினுட்பம் 2 ம் இடம்
சைவசமயம் 1 ம் இடம்
குடியுரிமை 2 ம் இடம்

**டிலக்சனா பப்ரிக் கவிதாஸ்**
தமிழ் 3 ம் இடம்
சைவசமயம் 2 ம் இடம்
நடனம் 1 ம் இடம்
செ.தொழினுட்பம் 3 ம் இடம்

**சாரு சுபாஸ்கரன்**
சங்கீதம் 3 ம் இடம்

**கம்சா கஜேந்திரன்**
நடனம் 2 ம் இடம்

**மிதுஜா செல்வசீலன்**
நடனம் 2 ம் இடம்

## தரம் - 09

**S. அபிஷேக்**
ஆங்கிலம், 1ம் இடம்
புவியியல், 1ம் இடம்
கிறிஸ்தவம் 1ம் இடம்
சித்திரம் 1ம் இடம்
தமிழ், 2ம் இடம்
விஞ்ஞானம், 2ம் இடம்
வரலாறு 2ம் இடம்
கணிதம் 3ம் இடம்

**A. மேரிறொசினா**
தமிழ் 1ம் இடம்
சுகாதாரம் 1ம் இடம்
கத்தோலிக்கம் 1ம் இடம்
புவியியல் 2ம் இடம்
ஆங்கிலம் 3ம் இடம்
குடியுரிமை 3ம் இடம்

**மு.துவாரகா**
வரலாறு 1ம் இடம்
குடியுரிமை 1ம் இடம்
சைவநெறி 1ம் இடம்
சங்கீதம் 1ம் இடம்
ஆங்கிலம் 2ம் இடம்
தமிழ் 3ம் இடம்

**S. சுதர்சன்**
கணிதம் 1ம் இடம்
விஞ்ஞானம் 1ம் இடம்
சுகாதாரம் 2ம் இடம்
P.T.S. 3ம் இடம்
கத்தோலிக்கம் 3ம் இடம்

**V.சிமியோன்**
கத்தோலிக்கம் 2ம் இடம்
தமிழ் இல. நயம் 2ம் இடம்
சுகாதாரம் 3ம் இடம்

**S. சுகந்தினி**
நடனம் 1ம் இடம்
கணிதம் 2ம் இடம்

**P.சிந்துஜன்**
P.T.S. 1ம் இடம்
குடியுரிமை 2ம் இடம்
சைவநெறி 2ம் இடம்

**J.விதுசன்**
கிறிஸ்தவம் 2ம் இடம்
சித்திரம் 2ம் இடம்
வரலாறு 3ம் இடம்

**K. அஜனா**
நடனம் 1ம் இடம்

**K. அபிஷா**
தமிழ் இல.நயம் 1ம் இடம்

**R. அனோஜினி**
சங்கீதம் 2ம் இடம்

**R. சேனுஜா**
நடனம் 2ம் இடம்

**S.சார்மி**
சைவநெறி 2ம் இடம்

**V.வினோத்**
P.T.S. 2ம் இடம்

**K.தேனுஷா**
கிறிஸ்தவம் 3ம் இடம்

**S. நிதர்சனா**
சித்திரம் 3ம் இடம்

**S. சஞ்சீவன்**
விஞ்ஞானம் 3ம் இடம்

## தரம் - 10

**எ. வாதுசன்**
கணிதம் 1ம் இடம்
விஞ்ஞானம் 1ம் இடம்
வணிகம் 1ம் இடம்
வரலாறு 2ம் இடம்
சுகாதாரம் 2ம் இடம்
கிறிஸ்தவம் 2ம் இடம்
சங்கீதம் 2ம் இடம்
தமிழ் 3ம் இடம்

**சு. கிருஷன்**
கத்தோலிக்கம் 1ம் இடம்
சுகாதாரம் 1ம் இடம்
வணிகம் 2ம் இடம்
இல. நயம் 2ம் இடம்
வரலாறு 3ம் இடம்

**ஜீ.டனோஜன்**
விவசாயம் 2ம் இடம்

**த. வைசன்**
கத்தோலிக்கம் 3ம் இடம்
சித்திரம் 3ம் இடம்
விவசாயம் 3ம் இடம்

**செ. சஜஸ்ரக்ஷையன்**
வரலாறு 1ம் இடம்
புவியியல் 1ம் இடம்
சித்திரம் 1ம் இடம்
விவசாயம் 1ம் இடம்
கணிதம் 2ம் இடம்
விஞ்ஞானம் 2ம் இடம்
சைவசமயம் 2ம் இடம்

**அ. யூலியஸ் சீசர்**
புவியியல் 2ம் இடம்
சித்திரம் 2ம் இடம்

**இ. சங்கீதா**
சங்கீதம் 3ம் இடம்

ச.சாரங்கா
நடனம் 2ம் இடம்
சைவம் 3ம் இடம்

**இ.யனுபா**
மனைப்பொருளியல் 3ம் இடம்

**சே. துவாரகா**
தமிழ் 1ம் இடம்
சைவம் 1ம் இடம்
இல. நயம் 1ம் இடம்
விஞ்ஞானம் 3ம் இடம்
வணிகம் 3ம் இடம்
சுகாதாரம் 3ம் இடம்

**ஜெ.தனுசியா**
ஆங்கிலம் 1ம் இடம்
சங்கீதம் 1ம் இடம்

**அ.நிஷாந்தினி**
மனைப்பொருளியல் 1ம் இடம்
கிறிஸ்தவம் 3ம் இடம்
நடனம் 3ம் இடம்

**றொ.மேரிசுதர்சினி**
கிறிஸ்தவம் 1ம் இடம்

**ர.சாருஜா**
குடியுரிமை 3ம் இடம்
த.இலக்கிய ந. 3ம் இடம்

**வெ. வித்தியகலா**
குடியுரிமை 1ம் இடம்

**நி.நிதுஷா**
நடனம் 1ம் இடம்
தமிழ் 2ம் இடம்
கத்தோலிக்கம் 2ம் இடம்
புவியியல் 3ம் இடம்

**மு.கோபிகா**
ஆங்கிலம் 2ம் இடம்
குடியுரிமை 2ம் இடம்
மனைப்பொருளியல் 2ம் இடம்

**டேவிட்**
கணிதம் 3ம் இடம்
ஆங்கிலம் 3ம் இடம்

## தரம் - 11

**பி.துர்ஷா**
தமிழ் 1ம் இடம்
கணிதம் 1ம் இடம்
வரலாறு 1ம் இடம்
சைவம் 1ம் இடம்
சங்கீதம் 1ம் இடம்
I.C.T 1ம் இடம்
வணிகம் 1ம் இடம்
விஞ்ஞானம் 2ம் இடம்
ஆங்கிலம் 3ம் இடம்

**ம.தர்சிகா**
விஞ்ஞானம் 1ம் இடம்
கத்தோலிக்கம் 1ம் இடம்
நடனம் 1ம் இடம்
விவசாயம் 1ம் இடம்
புவியியல் 1ம் இடம்
தமிழ் 3ம் இடம்
வரலாறு 3ம் இடம்

**ஜெ. மேரிஸ்ரெலா**
ஆங்கிலம் 1ம் இடம்
தமிழ் 2ம் இடம்
வரலாறு 2ம் இடம்
கத்தோலிக்கம் 2ம் இடம்
வணிகம் 3ம் இடம்

**அ.மேரியூலியட்**
வணிகம் 2ம் இடம்
நடனம் 2ம் இடம்
தமிழ் 3ம் இடம்
கத்தோலிக்கம் 3ம் இடம்
I.C.T. 3ம் இடம்

**டி.ஜெகு**
கிறிஸ்தவம் 1ம் இடம்
சித்திரம் 2ம் இடம்
சுகாதாரம் 2ம் இடம்

**சி.அன்ரன் றொசான்**
சுகாதாரம் 1ம் இடம்
புவியியல் 2ம் இடம்
சங்கீதம் 3ம் இடம்

**பா.கௌசிகா**
சங்கீதம் 2ம் இடம்
விவசாயம் 2ம் இடம்
சைவசமயம் 3ம் இடம்

**செ.செனாலியா மதுபாசினி**
விஞ்ஞானம் 3ம் இடம்
விவசாயம் 3ம் இடம்
புவியியல் 3ம் இடம்

**கி.ஜென்சலா**
நடனம் 1ம் இடம்
சுகாதாரம் 3ம் இடம்
புவியியல் 3ம் இடம்

**றொ.றொபின் சுதர்சன்**
சித்திரம் 1ம் இடம்
கிறிஸ்தவம் 2ம் இடம்

**கி.மதுஷா**
குடியுரிமை 2ம் இடம்
சித்திரம் 3ம் இடம்

**க.கஜேந்தினி**
ஆங்கிலம் 2ம் இடம்

**சரவணபவானந்தன்**
சைவசமயம் 2ம் இடம்

**ப.ஜசிதரன்**
இலக்கிய நயம் 1ம் இடம்

**சிவானந்தன்**
I.C.T. 2ம் இடம்

**கு. வைஷ்ணவி**
குடியுரிமை 1ம் இடம்

**இ.பிரியங்கன்**
குடியுரிமை 2ம் இடம்

**ம.பிரசாந்தினி**
குடியுரிமை 3ம் இடம்

**சி.பிரியங்கா**
குடியுரிமை 1ம் இடம்

## தரம் - 12 (2019)

**எ.சலோமி**

புவியியல் 1ம் இடம்
கர்நாடக சங்கீதம் 1ம் இடம்
தமிழ் மொழி 1ம் இடம்

**க.கிறிஸ்தியாள்**

அரசியல் விஞ்ஞானம் 1ம் இடம்
மனைப்பொருளியல் 2ம் இடம்
கிறிஸ்தவநாகரிகம் 3ம் இடம்

**ச.சயந்தினி**

புவியியல் 2ம் இடம்
கர்நாடக சங்கீதம் 3ம் இடம்
தமிழ் மொழி 2ம் இடம்

**கோ. அகல்வாணி**

மனைப்பொருளியல் 1ம்இடம்
இந்து நாகரீகம் 2ம் இடம்

**வி. ஸ்ரிபன்ராஜ்**

கிறிஸ்தவநாகரிகம் 1ம் இடம்
சித்திரக்கலை 2ம் இடம்

**ஜெ.சிம்ராஜ்**

அரசியல் விஞ்ஞானம் 2ம் இடம்
கிறிஸ்தவ நாகரிகம் 2ம் இடம்

**சே.கோகுலன்**

சித்திரக்கலை 1ம் இடம்
புவியியல் 3ம் இடம்

**மி.காயத்திரி**

பரதநாட்டியம் 1ம் இடம்

**ஸ்ரீ.அபிரா**

விவசாய விஞ்ஞான் 2ம் இடம்

**ஜி. தயேந்தினி**

தமிழ்மொழி 2ம் இடம்

**பி. திනுஜா**

கர்நாடக சங்கீதம் 2ம் இடம்

**சு. விபூசன்**

விவசாய விஞ்ஞானம் 2ம் இடம்

**றொ.மதுசன்**

அரசியல் விஞ்ஞானம் 3ம் இடம்

**ற.சாளினி**

மனைப்பொருளியல் 3ம் இடம்

**றி. ஆன்றிஷா**

சித்திரக்கலை 3ம் இடம்

## 2017 ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள்



செல்வன் - செ. டியூட்டன்ராஜ்



செல்வி - இ. சிந்துஜா



மதர் ஸ்ரீ லங்கா உறுப்பினர்கள்



2017 பரிசளிப்பு விழாவின்போது





இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்புத் திட்டம்

கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் உள நெருக்கீடுகளும் அதற்கான தீர்வுகளும் யாழ் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு சஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்புத் திட்டம்





சித்த மருத்துவ கண்காட்சியில் மாணவர்கள்

சின்னம் சூட்டும் வைபவத்தின்போது





2018 பாராளுமன்ற நிகழ்வின்போது

2017 ஒளிவிழாவின் போது

## தரம் - 13

**செ.யுவனிதா**

தமிழ் 1ம் இடம்

நடனம் 1ம் இடம்

புவியியல் 1ம் இடம்

**செ.கனிஸ்ரன்ராஜ்**

விவசாயம் 1ம் இடம்

அரசியல் 1ம் இடம்

புவியியல் 2ம் இடம்

**இ.இந்துஜா**

கிறிஸ்தவநாகரீகம்1ம் இடம்

தமிழ் 2ம் இடம்

**அ.அஜந்தன்**

கிறிஸ்தவநாகரீகம் 1ம் இடம்

தமிழ் 2ம் இடம்

**ஜெ.டட்ஷாமினி**

அரசியல் 2ம் இடம்

நடனம் 2ம் இடம்

**இ.கிருஷிகா**

அரசியல் 3ம் இடம்

நடனம் 3ம் இடம்

**றெ.மிரேஸ்**

விவசாயம் 2ம் இடம்

# வரவு ஒழுங்கில் முதன்மை வகிப்பவர்கள்

| தரம் | | | வருகைதந்த நாட்கள் |
|---|---|---|---|
| தரம் 01 – | | கா.சஞ்சய் | 193 |
| தரம் 02 – | | அ.அஸ்மிதன் | 184 |
| தரம் 03 – | | அ.அபிசன் | 194 |
| தரம் 04 | A | கா.துஷ்யந்தன் | 194 |
| | B | செ.கஸ்மினி | 192 |
| தரம் 05 | A | ச.கிஷாலினி | 191 |
| | A | ச.கிருஷாலினி | 191 |
| | B | க.கலைவேந்தன் | 189 |
| தரம் 06 | | ஐ. அக்ஷியா | 191 |
| தரம் 07 | | A பா.கௌதம் | 197 |
| | | B ர.பிருத்திகா | 190 |
| தரம் 08 – | | கெ.ரவிராஜ் | 192 |
| தரம் 09 – | | V. வினோத் | 192 |
| | | S. சஞ்சீவன் | 192 |
| தரம் 10 | | T. கீர்த்தனன் | 195 |
| | | A. வாதுஷன் | 195 |
| | | S. துவாரகா | 195 |
| தரம் 11 | A | பா.கௌசிகா | 192 |
| | B | ஸ்ரீ. சரவணபவானந்தன் | 193 |
| தரம் 12 – | | எ.சலோமி | 113 |
| | | செ.தனுசியா | 113 |
| தரம் 13 – | | செ.யுவனிதா | 182 |

## பாடசாலைக் கீதம்

எங்கள் கலாசாலை இந்து மகா வித்தியாலயமே
மங்காப் புகழ் மாணிக்கமாய் நின்றுலவுகின்றாய்
எண்ணற்ற கவின் கலைகள் எங்கள் கலாசாலையிலே
பண்ணறிய சுடராக பரந்து ஒளி பெருக்கிடவே
(எங்கள்)

கல்விதனை ஓங்கச் செய்யும் கற்கை நெறி பலவாக
செல்வ நற்சிறார் நமக்கு நல்ல பண்பை ஊட்டி
மெய்ப்பொருள் காண்பதென்ற நோக்கையே குறிக்கோளாய்
மெய்ஞான ஆசிரியர் வித்தை பல வூட்டி
(எங்கள்)

செங்கபில நிறத்தோடு மஞ்சள் வண்ணமும் கலந்து
மங்கலமாய் தெய்வீக மணம் வீசும் எங்கள் கொடி
யோக நற்சுவாமியின் திருவருள் வரத்தாலே
வளர்ந்தோங்கும் மாலை எங்கள் கலாசாலையிலே
(எங்கள்)

இணையில்லா வதிரிபீட விநாயகர் நற்றாளை
அனைவரும் சேர்ந்து ஒன்றாய் வணங்கிடுவோம்
நற்சேவை செய்யும் நல்லாசிரியர் துணையோடு
பொற் சேவையாற்றுகின்ற பொன் அதிபர் வாழிய வாழியவே
(எங்கள்)

வாழ்க எங்கள் கலாசாலை இந்துமகா வித்தியாலயம் (3)

பதிப்பு : மெகா பதிப்பகம்
நக்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 221 7939